தமிழ்ப் பல்கலைக் கழகச்

# செய்தி மலர்

மலர்: 5 திருவள்ளுவர் ஆண்டு - 2018 மாசி-2 14-2-1987 இதழ்: 11

## மலையின மக்கள் ஆய்வு மைய நிர்வாகக் கட்டடத் திறப்பு விழா

"பழங்குடிமக்களின் பண்பாடு மரபுகளைப் பாது காத்தலின் இன்றியமையாமையைவிடுதலைபெற்ற இக்கால இந்தியநாட்டு வளர்ச்சித் திட்டங்கள் விட்டுக்கொடுக்கக் கூடாது"

—என்று இந்திய மைய அரசின் மக்கள் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திருமதி இராசேந்திர குமாரி பாஜ்பாய் அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழக மலைவாழ் மக்கள் ஆய்வு மையத்தின் புதிய நிருவாகக் கட்டடத்தைத் திறந்து வைக்கும்போது கூறினார்கள்.





இத்திறப்பு விழா உதக மண்டலம் முத்தோரை பலடாவில் 12-2-'87 புதன் கிழமை மாலை 3-15 மணியில் உதகை மாவட்ட ஆட்சியாளர் திரு ஸ்ரீபதி அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது.

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் வரவேற்று உரையாற்றினார்கள்.

தமிழ் நாட்டரசு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு அருணாசலம் அவர்கள் தம் வாழ்த்துரையில் மலையின மக்கள் மையத்திற்கு நடப்பு ஆண்டிற்கு உரு.50 இலட்சம் வழங்குகின்றது என்று கூறினார். மலைவாழ் மக்கள் ஆய்வு மைய இயக்குநர் முனைவர் டி.வி.இராகவராவ் நன்றி நவின்றார். விழாவில் மலையின மக்களது நாட்டுப்புற நாட்டிய நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன.

## தமிழ்ப் பல்கலைக் கழகப் பொங்கல் விழா-கலை நிகழ்ச்சிகள்

13-1-1987 செவ்வாயன்று மாலை 6 மணியில் தஞ்சாவூர் சங்கீத மகாலில் தமிழ்ப் பல்கலைக் கழகப் பொங்கல் விழா சிறப்புக் கிராமியக் கலைநிகழ்ச்சிகள் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தன.

அன்னியூர் ஏ.பி.சண்முகம் குழுவினரது கரகம் காவடி ஆட்டமும் அப்பாவு சேர்வைக் குழுவினர் ஒயிலாட்டமும் கருப்பண்ணன் குழுவினர் கோலாட்டமும் சீனிவாசன் குழுவினர் பொம்மலாட்டமும் டி.ட.இந்திராணி, டி. ஆர். எஸ். மணி குழுவினர் கிராமிய மேடை நாடகப் பாடல் காட்சிகளும், துளசிமணிக் குழுவினர் கும்மிப் பாட்டும், கொல்லங்குடி கருப்பாயி நாட்டுப்புறப் பாடல்களும் சிறப்புற நிகழ்ந்தன.




இந்நிகழ்ச்சிகளைத் திருச்சி அனைத்திந்திய வானொலி நிலையமும் தமிழ்ப் பல்கலைக் கழகமும் இணைந்து நடத்தின. இந்நிகழ்ச்சிகளை 14-1-'87 பிற்பகல் 4 மணியில் திருச்சி வானொலி நிலையம் ஒலிபரப்பியது.

14-1-87 பொங்கலன்று மாலை 6மணியில் சங்கீத மகாலில் துணைவேந்தரவர்கள் தலைமையில் கலைமாமணி சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லிசைப் பாட்டும், கலைமாமணி டி.கே.டி. திருக்காளத்திக் குழுவினரின் கைச்சிலம்பாட்டமும் ஆகிய நாட்டுப்புறக் கலைநிகழ்ச்சிகள் நிகழ்ந்தன.

## காஞ்சித் தத்துவமையத்தில் துணை வேந்தர்

"தற்கால மனிதவாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு உதவும் வகையில் காலத்துக்கேற்ற சமய, தத்துவக் கருத்துக்கள் வளர வேண்டும். அத்தகைய கருத்துக்கள் உருவாவதற்கேற்ற இடமாகக் காஞ்சித் தத்துவ மையம் செயல் பட வேண்டும்"

—என்று தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் காஞ்சி நகர மக்களின் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பில் கூறியதுடன் இதன் வளர்ச்சிக்கு நகர மக்களின் ஒத்துழைப்பையும் வேண்டினார்.

நகர மக்களின் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்பில் தத்துவ மைய இயக்குநர் முனைவர் கூ.ரா. நஞ்சுண்டன் அனைவரையும் வரவேற்று உரையாற்றினார். மையத்தின் இணைப்பேராசிரியை முனைவர் ஜி.வி.சரோஜா நன்றி கூறினார்.

—தத்துவமையம்.

## தமிழ்ப் பாடத்திட்ட மேம்பாட்டுக் கருத்தரங்கு

இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனமும் பாரதியார் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையும் மொழியியல் துறையும் இணைந்து பாரதியார் பல்கலைக் கழகத் தமிழ்ப் பாடத் திட்ட மேம்பாட்டுக் கருத்தரங்கை 16,17-2-1987 ஆகிய இரு நாள்களிலும் நடத்தின.

பாரதியார் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ஆர்.சுப்பையன் அவர்கள் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்க, பேராசிரியர் தா.ஏ. ஞானமூர்த்தி அவர்கள் சிறப்புரையாற்றினார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக பேரா. சி.பாலசுப்பிரமணியம் அவர்களும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக பேரா.ஆறு.அழகப்பன் அவர்களும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பாக பேரா.கி.அரங்கன் அவர்களும், கல்லூரிக் கல்வி முன்னாள் இயக்குநர் பேரா.க. மீனாட்சிசுந்தரம் அவர்களும், பல்வேறு கல்லூரிகளிலிருந்து தமிழ்ப் பேராசிரியர்களும் கலந்துகொண்டார்கள்.

தமிழ்த் துறைத் தலைவர் பேரா.நா. செயராமன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்த முனைவர் சந்திரசேகரன் அவர்கள் நன்றியுரை நவின்றார்.

—மொழியியல் துறை.

## அனைத்திந்திய தமிழ் மொழியியல் கழகத்தின் இரண்டாவது கருத்தரங்கு மாநாடு

அனைத்திந்திய தமிழ் மொழியியல் கழகமும் பாரதியார் பல்கலைக் கழக மொழியியல் துறையும் தமிழ்த் துறையும் இணைந்து கோவை பி.எஸ்.ஜி கலை & அறிவியல் கல்லூரியில் இரண்டாவது கருத்தரங்க மாநாட்டினைப் 14,15-2-1987 ஆகிய இரண்டு நாள்களில் நடத்தின.

அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயராய்வு மையத்தின் இயக்குநர் பேரா.செ.வை.சண்முகம் அவர்கள் தலைமை ஏற்க, பாரதியார் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ஆர்.சுப்பையன் அவர்கள் மாநாட்டினைத் துவக்கி வைத்தார்.

சிறப்புரையாற்றிய தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்கள்,

"தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக அனைத்திந்திய தமிழ் இலக்கியக் கழகம் ஒன்றும், பருவ இதழ் ஒன்றும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் விரைவில் தொடங்கப் பெறும்"

—என்று அறிவித்தார்கள்.

பாரதியார் பல்கலைக் கழக மொழியியல் துறைப் பேராசிரியர் கி.கருணாகரன் வரவேற்க, தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் நா.செயராமன் அவர்கள் நன்றி நவின்றார்.

இரண்டு நாள்கள் நடைபெற்ற கருத்தரங்கு மாநாட்டில் அறுபதுக்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்து கொண்டனர். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சார்பாக முனைவர் கி.அரங்கனும் முனைவர் அருள்ராஜும் பங்கேற்றனர்.

—மொழியியல் துறை.

## இசைக் கருவிப் பரிசுப் போட்டி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பெயரால் ஆண்டு தோறும் வழங்கும் இசைக்கருவிப் பரிசுப்போட்டி இம் மாதம் 28-ஆம் நாள் புதன்கிழமை காலை 10 மணியில் தமிழ்ப் பல்கலைக் கழக அரண்மனை வளாகத்தில் உள்ள கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்றது.

இந்த இசைப்போட்டியில் சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி-சென்னை, இராணிமேரி கல்லூரி-சென்னை, தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி- மதுரை, அரசர் கல்லூரி-திருவையாறு, சீதாலட்சுமி இராமசாமி கல்லூரி- திருச்சிராப்பள்ளி ஆகிய கல்வி நிறுவனங்களின் இசைத்துறையில் பயிலும் மாணவ மாணவிகள் பங்கு பெற்றனர்.

சென்னைப் பல்கலைக் கழக மாணவி செல்வி கீதா கிருஷ்ணன் முதற் பரிசு பெறத் தகுதி பெற்றார்.

அவருக்கு உரு.1100/- பெறுமானமுள்ள ஒரு தம்புராவைப் பரிசாகத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் மாண்புமிகு முனைவர் ச. அகத்தியலிங்கம் அவர்கள் 30-1-'87 காலை வழங்கினார்கள்.

— கு.ஆ.தனபாண்டியன், இசைத்துறை.

## தமிழ்ப் பல்கலைக் கழக நூல்களுக்குப் பரிசும் பாராட்டும்

தமிழ் நாட்டரசின் சிறந்த நூல்களுக்கான பரிசுத் திட்டத்தின் 1985—ஆவது ஆண்டுக்குரிய பரிசுகளைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிட்ட இரண்டு நூல்கள் பெற்றுள்ளன.


திருவள்ளுவராண்டு 2018 தை முதல் நாளுக்கு நேரான 14-1-'87-இல் சென்னை வள்ளுவர்கோட்டத்தில் நடந்த விழாவில் நிதியமைச்சர் மாண்புமிகு முதுமுனைவர் இரா. நெடுஞ்செழியனார் பரிசுக்குரிய காசோலைகளையும் பாராட்டுச் சான்றிதழ்களையும் வழங்கிச் சிறப்பித்தார்.

இவ்விரு நூல்களையும் பதிப்பித்த தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புத்துறைக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பரிசுபெற்ற நூல் ஒவ்வொன்றுக்கும் உரு. 2000 பரிசும், பாராட்டுச் சான்றிதழும் நூல் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.

### பரிசு பெற்ற நூல்களும் ஆசிரியர்களும்

1. மருந்தியல் — மருந்து நலவியல் முதற் பரிசு. (தமிழ்ப் பல்கலைக் கழகக் குறுகிய கால ஆய்வுத் திட்டத்தில் உருவாக்கப்பட்ட நூல்) இணை ஆசிரியர்கள்:




அ) டாக்டர் மு. துளசிமணி, எம்.டி., புதுவை அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலராகப் பணிபுரிகிறார். புதுவை அரசின் மருந்தாளுநர் தேர்வுக்குழு உறுப்பினராகவும் செவிலியர்ப் பயிற்சிக் கல்லூரி மருந்தியல் பயிற்சித் திட்டப் பொறுப்பாளராகவும் புதுச்சேரியில் பணிபுரிகிறார். மருந்தியல் பற்றி பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியவர்.

ஆ) டாக்டர் சா. ஆதித்தன், எம்.டி., புதுவை சவகர்லால் உயர் மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலைய மருந்தியல் துறை, துணைப் பேராசிரியர். இந்திய மருந்தியல் சங்கத்தின் ஆராய்ச்சிக்கான விருது பெற்றவர். இந்திய மருந்தியல் இதழ் ஆசிரியர் குழுவில் உறுப்பினர். பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியவர்.




2. கணிப்பொறி ஒருங்கும் பேசிக் மொழியும் — பொறியியல் முதற் பரிசு. ஆசிரியர் — பேரா. கா. செ. செல்லமுத்து, பி.இ., (ஆனர்ஸ்), எம்.இ.,



தமிழ்ப் பல்கலைக் கழகக் கணிப்பு மையப் பேராசிரியராகப் பணிபுரிகிறார். கணிப்பொறியில் பல மொழிகளின் எழுத்து வடிவாக்கம் செய்துள்ளார். கணிப்பொறி ஒருங்கும் பேசிக் மொழியும் என்னும் தமிழ் நூலின் ஆசிரியர். 'Tamil University Machine Translation System', 'Catalogue of Tamil Palmleaf Manuscripts in the Tamil University', 'Computer Analysis of Tirukkural' என்னும் ஆங்கில நூல்களின் இணை ஆசிரியர்.

### தமிழ்ப் பல்கலைக் கழகப் பேராசிரியருக்குப் பரிசு

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் உள்ள கல்வெட்டியல் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றும் புலவர்



செ. இராசு, எம்.ஏ., அவர்கள் தம் தனி முயற்சியில் எழுதிய செந்தமிழ் வேளிர் எம்.ஜி.ஆர் என்னும் நூலுக்குக் கட்டுரை, வாழ்க்கை வரலாறு பிரிவின் இரண்டாவது பரிசைத் தமிழ் நாட்டரசின் சிறந்த நூல்களுக்கான பரிசுத் திட்டத்தின் கீழ் பெற்றுள்ளார். உரு. 1000/-உம் பாராட்டுச் சான்றிதழும் கொண்டது இப்பரிசு.

### தில்லை அம்பலத்தின் மேல் திருமுறைகள் ஒலிக்கின்றன

தில்லை நடராசர் கோயிலில் அம்பலத்தின் கீழ் நின்று திருமுறைகள் இதுவரை பாடப்பட்டன. முனைவர் வ. சு. ப. மாணிக்கனார் தலைமையிலுள்ள திருமுறை இயக்கக்குழு முனைந்து செயல்பட்டதால் தற்போது 1-2-'87 முதல் திருமுறைகள் அம்பலத்தின் மேல் தீட்சிதர்களால் பாடப்பெறுகின்றன. இதற்குத் தமிழக அரசும் ஒத்துழைத்தது. கோட்டாட்சி உயர் அலுவலர் தில்லைத் தீட்சிதர்கள்பால் எடுத்து விளக்க, தீட்சிதர்கள் இசைந்தனர்.

தமிழ்ப் பல்கலைக் கழகச்

# செய்தி மலர்

திங்களிதழ்

பதிவஎண் 15033/82X7

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 001.
தமிழ்நாடு - இந்தியா.

இ.அ.அ. மட்டும்.

நாரி
ாசா சரபோசி
ல் நூலகம்

தமிழ்ப் பல்கலைக் கழக நூல்கள் - களஞ்சியங்கள் நீங்கலாக

1 - 3 - 87 முதல்

## 30 விழுக்காடு விலைகள் குறைக்கப்பட்டுள்ளன

கழிவு 15 விழுக்காடு - மாணவர் பதிப்புகள் தவிர

அஞ்சல் செலவு தனி

நூலகம் வீட்டுக்கு விளக்கம்
நூல் வாங்குதல் நல்ல பழக்கம்

## மதிப்புரைகள்

### செழியதரையன் பிரபந்தங்கள்

சின்னசேலம் பகுதியில் குறுநில மன்னராக ஆண்டுவந்த நால்வரைப்பற்றி புலவர் பலர் பாடிய ஆறு நூல்களைக் கொண்டது இந்தத் தொகுப்பு நூல். இதில் கங்காதரச் செழியன் பேரில் வாதும், திருவேங்கட செழியனை முன் னிலைப்படுத்தி நன்னெறியும், தாகந்தீர்த்த செழியனைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு ஐந்திணைக் கோவை யும், பிள்ளைத் தமிழும் கங்காதரச் செழியன்மேல் வண்ணமும் அந்தாலந் தீர்த்த செழியனின் பெருமைகளை விளக்கும் மஞ்சரியும் இடம் பெற்றுள்ளன.

இந்த அருமையான அறுவகைப் பிரபந்தங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்த பதிப்பாசிரியர் குழுவினர் பாராட்டிற்குரியவர்கள்.

-நன்றி, தினமணி, 9-2-'87.

### தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன்

ஆசிரியர் வெ.வரதராசன்

ஒப்பனைக் கலை அழகுக் கலைகளில் ஒன்று. இதில் பண்டைத் தமிழர் காட்டிய ஆர்வத்தையும் அதைப் போற்றிய முறையையும் இலக்கியங்களின் துணைகொண்டு ஆராய்ந்திருப்பது இந்நூலின் சிறப்பு அமிசமாகும்.

இந்நூலில் 9 பிரிவுகள் உள்ளன. ஒப்பனைக்குப் பயன்படுத்திய கருவிகள் 12 இன் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பின்னிணைப்பில் 64 கலைகள் விளக்கம் பெறு கின்றன. இது ஒரு சிறந்த இலக்கிய ஆராய்ச்சி நிறைந்த நூல். -நன்றி, தினமணி, 26-1-87.

## களஞ்சிய வெளியீடுகள்

| | | | உரு. |
|---|---|---|---|
| 1. | வாழ்வியற் களஞ்சியம் | தொகுதி - 1 | 300/- |
| 2. | " | தொகுதி - 2 | 300/- |
| 3. | " | தொகுதி - 3 | 300/- |
| 4. | சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் | தொகுதி-1 | 250/- |
| 5. | " | தொகுதி-2 | 250/- |
| 6. | அறிவியற் களஞ்சியம் | தொகுதி-1 | 300/- |

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்-613 001.